# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண்.33 /2017**

திரு. E. ஜெயக்குமார்,
த/பெ ஏழுமலை,
23/21, சக்தி நகர்,
வண்டிபாளையம் ரோடு,
கடலூர் – 607 004. . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

1) செயற் பொறியாளர் / இ&ப,
கடலூர்,
கடலூர் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.7ஏ, செல்லிக்குப்பம் மெயின் ரோடு,
கடலூர் – 607 001.

2) உதவி செயற் பொறியாளர் / இ&ப,
கடலூர்,
கடலூர் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பெரிய கோவில் தெரு,
கடலூர் – 607 002. . . . . . எதிர்மனுதாரர்கள்

**ஆணை நாள்: 22.5.2017**

1. திரு. E.ஜெயக்குமார், த/பெ ஏழுமலை, கடலூர் அவர்களின் 13.042017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.33/2017 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. திரு. E. ஜெயக்குமார் அவர்கள் அவரின் மின்இணைப்பு எண்.02–006–014–684ல் இரு மாதங்களுக்கு ஒருமுறை கணக்கெடுப்பதற்கு பதில் 4 மாதங்கள் கழித்து மின் பயன்பாட்டளவு கணக்கீடு செய்ததால் அவர் அதிகமாக செலுத்தியுள்ள ரூ.1520/–ஐ திரும்ப பெற்றுதர வேண்டும் என்று கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு மின்குறைதீர்ப்பாளரின் 21.4.2017 நாளிட்ட அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

4. மேற்பார்வை பொறியாளர்/கடலூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 15.5.2017 நாளிட்ட கடிதத்தில் 5.5.2017 அன்று செயற்பொறியாளர்/கடலூர் அவர்களால் இசைவிணக்க கூட்டம் நடத்தப்பட்டது என்றும் அதில் கலந்து கொண்ட மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவினை திரும்ப பெற்றுக் கொள்வதாக 10.5.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்து மேல்முறையீட்டாளரின் 10.5.2017 நாளிட்ட தலைவர், Tamil Nadu Electricity Ombudsman, சென்னை என்று முகவரியிடப்பட்ட கடிதத்தின் நகலையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

5. மேற்பார்வை பொறியாளர், கடலூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்று 10.5.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்திருப்பதால் மேல்முறையீட்டாளரின் 10.5.2017 நாளிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கடிதத்திலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ பொருள் – கடலூர் மின்பகிர்மான வட்டம் , திருப்பாதிரிப்புலியூர் பிரிவுடன் The Executive Engieer/O&M, Cuddalore, Cuddalore Electricity Distribution Circle. TANGEDCO., No. 7A. Nellikuppam Main Road. cuddalore என்பவர் முன்னிலையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தையில் சமாதானம் எட்டப்பட்டதால் Tamil Nadu Electricity Ombudsman க்கு நான் அளித்த புகார் மனு மீது நடைபெறவுள்ள விசாரணையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுவது – தொடர்பாக.*

*பார்வை – (1) Lr.No.TNEO/Appeal Petition No.33 of 2017/D.No.579/2017, dated 21.4.2017.*
*(2) Petition dated 13.4.2017 of E. Jayakumar S/o G. Elumalai, Vandipalayam Road, Cuddalore 4.*

********

*பார்வை–2ன் படி 13.04.2017 அன்று Tamil Nadu Electricity Ombudsmanக்கு அளித்திருந்த எழுத்துப்பூர்வமான மனுவில் கூறிய புகாரின் மீது விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரியிருந்தேன். அதனை தொடர்ந்து பார்வை–1ன் படி கூறியிருந்த கருத்துக்களின்படி 05–05–2017 அன்று The Executive Engineer/O&M, Cuddalore, Cuddalore Electricity Distribution Circle, TANGEDCO No.7A, Nellikuppam Main Road, Cuddalore என்பவர் முன்னிலையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தையில் சமாதானம் எட்டப்பட்டதால் Tamil Nadu Electiricty Ombudsmanக்கு நான் அளித்த புகார் மனு மீது நடைபெறவுள்ள விசாரணையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமெனவும் இப்புகார் மனு மீது மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை எனவும் கேட்டுக் கொள்கிறேன்.”*

**6.** மேற்கண்ட கடிதத்தின்படி, கடலூர் மின்பகிர்மான வட்டத்தின் செயற்பொறியாளர், கடலூர் அவர்களின் முன்னிலையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தையில் சமாதானம் எட்டப்பட்டதால் தமிழ்நாடு மின்குறைதீர்ப்பாளருக்கு அளித்த புகார் மனு மீது நடைபெற உள்ள விசாரணையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றும் மேற்கண்ட புகார் மனு மீது மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை எனவும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பது தெரிகிறது.

**7.** மேல்முறையீட்டாளர் அவரின் மேல்முறையீட்டு மனு மீது நடைபெற உள்ள விசாரணையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றும் மேற்கொண்டு மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று கேட்டுக் கொண்டுள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.**33/2017** வேறு நடவடிக்கை தேவையில்லை என்று முடித்து வைக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. E. ஜெயக்குமார்,
த/பெ ஏழுமலை,
**23/21**, சக்தி நகர்,
வண்டிபாளையம் ரோடு, கடலூர் – **607 004.**

**2)** செயற் பொறியாளர் / இ&ப,
கடலூர்,
கடலூர் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.7ஏ, செல்லிக்குப்பம் மெயின் ரோடு,
கடலூர் – **607 001.**

3) உதவி செயற் பொறியாளர் / இ&ப,
கடலூர்,
கடலூர் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பெரிய கோவில் தெரு,
கடலூர் – 607 002.

4) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
13ஏ நேதாஜி ரோடு, கடலூர் – 607 001.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.